**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 - 2019**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறான தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் குறிக்கோள்களாக உள்ளது. செயற்திட்ட நடவடிக்கைகள் செயற்திட்ட அபிவிருத்தி உதவி ஆலோசனை ஒப்பந்தம், செயற்திட்டம்- 01 இற்கான மேலதிக நிதி மற்றும் செயற்திட்டம்- 02 இற்கான மேலதிக நிதி என்ற பெயருடைய 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 29,642.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 228.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,990 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்ட அதேநேரம் ரூபா 650 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் விசேட நிதி வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ரூபா 7,742.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 59.56 மில்லியன் ஐரோப்பிய முதலீட்டு வங்கியால் (ஈஐபீ) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,259.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 7,231.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.63 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,410.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 172.39 மில்லியன் கொழும்பு மா நகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 இன் நடவடிக்கைகள் மீது செய்யப்பட்ட அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 03 ஆனது அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம்- 03 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு

இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்துவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடு

| | தொகை ரூபா | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 மற்றும் கொழும்பு மா நகர சபையால் அமுலாக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி II என்பவற்றில் கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்த ரூபா 165.71 மிலிலியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 973,339.44 கூட்டுத்தொகையான கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் வட்டிகள் பிரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 165.71 மில்லியன் | வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களால் கடன் மீதி குறைத்தக் காட்டல் | செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் பொது திறைசேரிக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செலுத்தப்பட்ட வட்டி நடைபெறும் வேலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் சாட்டுதல் செய்யப்பட்ட கடன் வட்டி தவிர்க்கப்படட்டது. மேலதிக பொது முகாமையாளர் (நிதி) (வரைவு கணக்காய்வு அறிக்கையின் பதிலுடன் ஏற்கனவே வழங்கப்பட்டது) அறிவுறுத்தல்களிற்கு அமையவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் செயற்திட்ட நடைபெறும் வேலைகளின் நோக்கத்திற்காகவும் இந்த நடைமுறையை செயற்திட்ட அலுவலகம் பின்பற்றப்படுகின்றது. எவ்வாறாயினும், ஆசிய அவிவிருத்தி வங்கி வட்டி உரிய செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்குகளிற்கான குறிப்புகளில் குறிப்பு 11 இன் கீழ் | மீளாய்வாண்டு இறுதியில் பயன்படுத்திய கடன் தொகையை காட்டுவதற்கு இயலக்கூடியவாறு கடனளிக்கும் முகவரால் நேரடியாக அறவிடப்பட்ட உரிய கிரயங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |

வெளிப்படுத்தப்பட்டிருந்தன.
மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடள் கைசாத்திட்ட துணைநிலை கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டி என்பன திறைசேரியால் செலுத்தப்பட்டன. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை துணைநிலை கடன் உடன்படிக்கையின் பிரகாரம் திறைசேரிக்கு வட்டியை செலுத்துவதற்கு பொறுப்புடையது. அதேநேரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை மூல கடன் உடன்படிக்கையின் பிரகாரம் எந்தவொரு வட்டியையோ அல்லது கடப்பாட்டுக் கட்டணங்களையோ பதியப்பட்டிருக்காததுடன் திறைசேரியானது தேசிய கணக்குகளின் செலவினமாக அவர்களுடைய கணக்குக் புத்தகங்களில் கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டியை பதிகின்றன.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டம் தொடங்கிய திகதியிலிருந்து 38 மாதங்கள் கடந்த பின்னரும் 2019 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்ட- செயற்திட்டம்- 01 மற்றும் 02 இன் மேலதிக நிதி 2019 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்காமையால் குறிப்பிடத்தக்க முன்னெற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கூறு/ உப கூறு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னெற்றம் | | | | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தனிப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்த்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | ------------------ | -------------------- | -------------------------------- | ------------------------------ |
| **செயற்திட்ட அபிவிருத்தி உதவி** | | | | | செயற்திட்ட பூத்தியாக்கலில் தாமதம் | மேலதிக செயற்திட்ட கிரயம் மற்றும் செயற்திட்ட காலப்பகுதி நீடிப்புக்கான சாத்தியம் | வேறு ஆலோசனை சேவைகள் ஒப்பந்தம் மற்றும் பொருட்கள் மற்றும் வெலைகளின் ஒப்பந்தங்கள் வழங்க வேண்டியிருந்தன. | எதிர்காலத்தில் செயற்திட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் தனிப்பட்ட ஒப்பந்தங்களை திட்டமிடப்பட்டவாறு அந்த ஆண்டிற்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (i) ஆலோசனை ஒப்பந்தம் | 15 | 08 | 07 | 01 | | | | |
| (ii) பொருட்கள் மற்றும் வேலைகள் ஒப்பந்தங்களை | 28 | 14 | 14 | 13 | | | | |
| செயற்திட்டம் - 01 இற்கான மேலதிக நிதி | - | - | | - | | | | |
| செயற்திட்டம் - 02 இற்கான மேலதிக நிதி | - | - | - | - | | | | |

### 3.2 குறைவாக பயன்படுத்திய வளங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | நிகழிச்சிதிட்டம் - செயற்திட்டம் 03 இன் பிரதான நோக்கம் நீர் வழங்கல் முறைமையை புனரமைத்து விரிவாக்குவதுடன் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்குமாக (கட்டம் 01 மற்றும் கட்டம் 02 ஆகிய இரண்டிற்காகவும்) நிதிக் பற்றாக்குறைவுகளை வழங்குவதாக உள்ளது. எவ்வாறாயினும், கடனின் கீழ் மேலதிக நிதியளிப்பு ஓழுங்குகளின் கீழ் செய்யப்பட்ட ரூபா 4,550 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிதிட்டம்- செயற்திட்டம் 01 மற்றும் 02 என்பவற்றின் முறையே 84.12 சதவீதம் ற்றும் 52.11 சதவீத குறைவான நிதி முன்னேற்றம் காரணமாக 2019 திசெம்பர் 31 வரையும் நிகழிச்சிதிட்டம் - செயற்திட்டம்- 03 ஆல் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அரசாங்கமானது கடன் உடன்படிக்கையில் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேலதிகமாக கடப்பாட்டு கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்தது. | இலங்கையிள் ரூபா பெறுமதி ஐ.அ. டொலர்களிற்கு எதிராக குறைவடைந்தமையால் கட்டம் 01 மற்றும் 02 இன் கீழ் குறிப்பிடத்தக்களவு தொகை சேமிக்கப்படுவதை நாஙகள் இனஙகண்டோம். இதன் விளைவால், கட்டம் 01 கடன் தொகை 2019 இற் முன்னர் கைதவிர்க்க முடியாதிருந்தது. தற்பொது ஆசிய அபிவிருத்தி வங்கி கட்ப்பட்டு கட்டண சதவீதம் மேலும் நீடிப்பு இல்லாமல் கடன் தொகை சேமிப்பு மற்றும் கைதவிர்ப்பு பயன்படுத்துவதற்கு 100 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | செயற்திட்ட காலப்பகுதியின் பொது கடன் பெறுகைகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மொத்த கடன் பெறுகைகளின் ரூபா 390 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியன் செயற்திட்ட அபிவிருத்தி உதவிச் செலவினங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட காலப்பகுதி 44 மாதங்களில் 38 மாதங்கள் கடந்த பின்னர் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தகின்ற ரூபா 80.63 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொர் 0.48 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரசாங்கமானது கடன் உடன்படிக்கையில் மதிப்பிடப்பட்ட தொகைக்கு மேலதிகமாக கடப்பாட்டு கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்தது. | பிடிஏ கடன் தொகை புதிய செயற்திட்டங்கள் இனஙகாண்பதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான தேவைகளின் பிரகாரம் தொகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்ட காலப்பகுதியின் போது கடன் பெறுகைகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய தண்ணீர், சுகாதாரம் மற்றும் தண்ணீர் தடை ஆதரவு அச்சு என்பவற்றில் விசேட அனுபவத்தை கருத்திற்கொள்ளாமல் தண்ணீர் தடை ஆதரவு அச்சு நிபுணர் சேர்க்கப்பட்டிருந்தார். | தனிப்பட்ட ஆலோசனை நிபுணரை மதிப்பாய்வு செய்யும் போது சம்பந்தப்பட்ட அனுபவத்தனை கருத்திற் கொண்டிருக்கவில்லை. | தண்ணீர் தடை ஆதரவு நிபுணரின் மொத்த அனுபவம் 11 ஆண்டுகளும் 06 மாதங்களுமாக கருதப்பட்டிருந்தது. இதன்படி, தெரிவுசெய்யப்பட்ட ஆலோசனையாளருக்கு 90.85 புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தது. (5 ஆண்டுகளிற்கு மேலதிகமாக தண்ணீர் தடை ஆதரவு நிபுணர் வழங்கப்பட்ட 19.5 புள்ளிகளிற்காக 6.5 ஆண்டுகளுடைய அனுபவத்தை வைத்திருந்தார்) | ஆலோசனையாளரை சேர்க்கும் போது ஆட்சேர்ப்பு முறைமையை கடுமையாக பின்னற்றுதல். |

## 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்த வழங்கல், உடன்படிக்கை கைச்சாத்திடல், பூர்தியாக்கும் பட்டியல் திகதி மற்றும் இறுதி அறிக்கை சர்ப்பித்தல் என்பன கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டமானது குறித்த செயற்திட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கான உபாயம் இருந்ததா என ஐயத்திற்கிடமாக உள்ளது. | கொள்வனவு திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மாதிரி மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்தது. நாங்கள் அபிவிருத்தி வங்கியின் மாதிரி மற்றும் வழிகாட்டலை மாற்றுவதற்கு அதிகாரத்தை கொண்டிருக்கவில்லை. | கொள்வனவு வழிகாட்டல் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வேண்டுகைகளி பிரகாரம் போதிய தகவல்களுடன் தயாரிக்கப்பட கொள்வனவு திட்டம் வேண்டியதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மாதிரியும் மாற்றப்பட வேண்டியவில்லை ஏனென்றால், அத்தகைய வேண்டுகைகள் கொள்வனவு திட்டத்துடன் தொடர்புயைன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 10 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்விற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாடு நலிவாகவுள்ளது. | கணக்காய்வாளர்களால் வரைவு கணக்காய்வு அறிக்கை பி3 மூலம் குறிப்பிடப்பட்ட அதே ஐயவினாவிற்காக ஐஏ பதிலை தயவுசெய்து பார்க்கவும். | வேண்டுகைகள் போதியளவு பின்பற்றப்பட வேண்டும். |